| | | |
|---|---|---|
| Aaruthal | **எதிர்வரும் கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான**<br>**விசேட இடர்கால செயற்றிட்டம் - 2021**<br>**மாதிரி வினாத்தாள் – I** | **08.10.2021** |

| | | |
|---|---|---|
| **தரம் - 11** | **தமிழ்மொழியும் இலக்கியமும்** | **நேரம் :- 3 மணி 10 நிமிடம்** |

## பகுதி - I

❖ **எல்லா வினாக்களிற்கும் விடை எழுதுக.**

➢ **தடித்த எழுத்தில் அமைந்த சொல் பற்றிய வினாவிற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

01) நாயனையார் **கேண்மை** - இங்கு கேண்மை என்பது
(1) அன்பு (2) நட்பு (3) உறவு (4) நன்றி

02) பூத்த ஜோதி **வதனம்** - இங்கு வதனம் என்பது
(1) ஒளி (2) நெருப்பு (3) முகம் (4) அழகு

03) **தூல வடிவில்** நின்றும் மறைந்த இலட்சிய புருடர்களை
இங்கு தூலவடிவு என்பதன் எதிர்க்கருத்து
(1) தூய வடிவு (2) அசுத்த வடிவு (3) சூக்கும வடிவு (4) பெரு வடிவு

04) **சண்டமாருதம்** அடித்து ஓய்ந்தது - சண்டமாருதம் என்பதன் எதிர்க்கருத்து
(1) மந்தமாருதம் (2) அமைதி (3) சூறாவளி (4) கடும்புயல்

05) நெருங்கக் காண்பது **கன்னலில்** செந்நெல் - இங்கு கன்னல் என்று சுட்டப் பெறுவது
(1) நெல் (2) கரும்பு (3) புல் (4) வாழை

➢ **பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

06) இப்பொழுது இங்கு கிளைமேற் (Climate) சரியில்லை - இங்கு Climate என்பதற்குரிய தமிழ்ச் சொல்
(1) காலநிலை (2) வானிலை (3) பருவகாலம் (4) வெப்பநிலை

07) கூட்டத்தைக் குறிக்கும் மரபுச் சொற்களில் பொருத்தமற்றது
(1) கரும்பு - கொல்லை (2) தேயிலை - சோலை
(3) மா - தோப்பு (4) மரம் - காடு

08) குதிரை, தானியப் பொடி, பெரிய என்றும் பல பொருள் தரும் சொல்
(1) பரி (2) கா (3) திரு (4) மா

09) கூட்டத்தைக் குறிக்கும் பெயர்களில் தோப்பு என்ற சொல்லால் குறிக்கும் வழக்கம் அற்றது
(1) மா (2) நெல் (3) வாழை (4) தென்னை

10) உற்சாகமூட்டுதல் என்பதைக் குறிக்கும் மரபுத் தொடர்
(1) தட்டிப் பார்த்தல் (2) தட்டிப் பேசுதல்
(3) தட்டிக் கொடுத்தல் (4) தட்டிக் கழித்தல்

11) மாறுபட்ட பொருள் குறிக்கும் இணைமொழி

(1) தப்பும் தவறும் (2) சீரும் சிறப்பும்

(3) ஒளிப்பும் மறைப்பும் (4) ஆக்கமும் கேடும்

12) "காக்க வேண்டியவர்களே அழித்தல்" என்னும் பொருள் தரும் உவமைத் தொடர்

(1) வைக்கோல் போரில் நாய் போல

(2) வளர்த்த கடா மார்பில் பாய்தல் போல

(3) வேலி பயிரை மேய்ந்தாற் போல

(4) பாம்புக்குப் பால் வார்த்தாற் போல

13) ஒரு பயனை எய்த விழையும் அதேவேளை இன்னொன்றை இழக்க விரும்பாமை என்ற கருத்தைப் புலப்படுத்தும் பழமொழி

(1) துள்ளின மாடு பொதி சுமக்கும்

(2) நுணலும் தன்வாயாற் கெடும்

(3) இக்கரைக்கு அக்கரை பச்சை

(4) கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை

14) ஈகைக் குணத்தை வலியுறுத்தும் பழமொழி

(1) கனிந்த பழம் தானே விழும்

(2) இரக்கப் போனாலும் சிறக்கப் போ

(3) இட்டுக் கெட்டார் எவருமே இல்லை

(4) ஆற்றிலே போட்டாலும் அளந்து போடு

15) ஆல் போல் தளைத்து அறுகுபோல் வேரூன்றி என்ற அருஞ்சொற்றொடர் உணர்த்தும் பொருள்

(1) பரம்பரை வாழ வாழ்த்தல்

(2) செழிப்போடு அழவின்றி வாழ வாழ்த்தல்

(3) நாளொரு மேனி பொழுதொரு வண்ணம் வாழ வாழ்த்தல்

(4) வைத்த கண் வாங்காமல் பார்த்துப் பார்த்து வளர்த்தல்

16) கண்ணன் எப்பொழுதும் மொலு மொலு என்று பேசினான். இங்கு மொலு மொலு என்ற இரட்டைக் கிளவிச் சொல் உணர்த்துவது

(1) விடாது பேசுதல் (2) பயமின்றிப் பேசுதல்

(3) வாய்க்குட் பேசுதல் (4) குறை பேசுதல்

17) அரசரும் செல்வரும் தமக்குக் கீழே சேவை புரிவோரிற்கு வழங்கும் நிலம்

(1) ஓம்படை (2) நிந்தகம் (3) இராக்கதம் (4) ஆவணம்

18) நகையும் பரிகாசமும் சேர்ந்து வரக் கவி புனைபவன்

(1) ஆசுகவி (2) விகடகவி (3) சிலேடைக் கவி (4) ஆன்மக் கவி

19) மாறன் சோம்பேறித்தனம் மிகுந்தவன். இங்கு சோம்பேறித்தனம் எனும் பொருள் குறிக்கக் கிழக்குப் பிரதேசத்தில் வழங்கும் சொல்

(1) சும்மாடு (2) துறைக்காரன் (3) சோங்கன் (4) சார்

20) கண்ணன் தபாற்கந்தோரில் வேலை செய்கிறான். இங்கு கந்தோர் என்பது

(1) போர்த்துக்கேய மொழிச் சொல் (2) மராட்டி மொழிச் சொல்

(3) ஒல்லாந்து மொழிச் சொல் (4) பாளி மொழிச் சொல்

➢ **பின்வரும் வினா ஒவ்வொன்றிற்கும் மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க.**

21) ககரம் எந்தச் சொல்லில் "*g*" என்னும் ஆங்கில எழுத்திற்கு நிகராக ஒலிக்கிறது

(1) தங்கம் (2) மேகம் (3) கடல் (4) கதவு

22) பின்வருவனவற்றுள் பகாப்பதம்

(1) கூனி (2) ஊரன் (3) பாடல் (4) அழகு

23) பின்வருவனவற்றுள் ஆக்கப் பெயரடை

(1) சிறிய (2) நல்ல (3) கருணையுள்ள (4) இனிமையாக

24) பின்வருவனவற்றுள் முன்னொட்டு இடம்பெற்ற சொல்

(1) மறுமலர்ச்சி (2) முதலாளி (3) குறியீடு (4) ஆட்டம்

25) தன்னைத்தான் பார்த்துச் சிரிக்கிறது என் பித்து மனம் - பித்து மனம் என்பது

(1) பயனிலை (2) செயப்படுபொருள்

(3) அடைமொழி (4) எழுவாய்

26) மரத்தை வெட்டுக்கத்தி கொண்டு வெட்டினான். இங்கு வெட்டுக்கத்தி என்பது

(1) பண்புத் தொகை (2) வினைத் தொகை

(3) வேற்றுமைத் தொகை (4) அன்மொழித் தொகை

27) பன்மை உருபு பெற்று அமையத்தக்க சொல்

(1) ஊர் (2) அன்பு (3) தண்ணீர் (4) இந்தியா

28) "கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு" இங்கு கற்றோர் என்பது

(1) தொழிற் பெயர் (2) வினையாலணையும் பெயர்

(3) ஆக்கப் பெயர் (4) காரணப் பெயர்

➢ **பொருத்தமற்ற உதாரணம் இடம்பெற்றுள்ள சொற்தொகுதியைத் தெரிவு செய்க.**

29) (1) பெயர்ச் சொல் - கரடி, ஆசிரியர், கொழும்பு

(2) வினைச் சொல் - வந்தான், ஓட்டம், பாடுதல்

(3) இடைச்சொல் - உம், தோறும், ஆ

(4) உரிச்சொல் - சால, உறு, நனி

30) (1) கூட்டுப் பெயர் - எழுதுகோல், புகையிரதநிலையம், பறிமுதல்

(2) காரணப் பெயர் - மண்வெட்டி, பறவை, மீன்கொத்தி

(3) தொழிற் பெயர் - சிரித்தல், பார்த்தல், கூவுதல்

(4) ஆக்கப் பெயர் - முதலாளி, விடுகாலி, பாற்காரன்

➢ **புள்ளிக் கோடிட்ட இடத்தை நிரப்பப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

31) கவிஞர்கள், எழுத்தாளர்கள், விமர்சகர்கள் ஆகிய ................................ சமூகப் பிரக்ஞை உள்ளவர்களாகத் தொழிற்பட வேண்டும்.

(1) இலக்கியவாதிகள் (2) கலைஞர்கள்

(3) அறிஞர்கள் (4) படைப்பாளிகள்

32) தேர்தல் காலத்தில் வாக்களிக்கும் நடைமுறைகளை .................................... பல்வேறு நாடுகளில் இருந்தும் பிரதிநிதிகள் வந்து சேர்ந்தனர்.

(1) நிர்வகிக்க (2) கண்காணிக்க (3) பயிற்சியளிக்க (4) பாதுகாக்க

33) தனியார் தாபனங்கள் நட்டத்தில் இயங்குவதைத் தடுப்பதற்காக ஆணைக்குழு செய்த .................................. ஏற்றுக் கொள்ளப்பட்டது.

(1) ஆய்வுரை (2) மதிப்புரை (3) உறுதியுரை (4) விதப்புரை

34) ஜனாதிபதி தேர்தலுக்குரிய ....................................... தாக்கல் செய்வதற்கான முடிவுத் திகதி அறிவிக்கப்பட்டுள்ளது.

(1) பதிவு (2) வேட்புமனு (3) விண்ணப்பம் (4) விஞ்ஞாபனம்

35) வரவு செலவுத் திட்டத்தில் துண்டு விடும் தொகையை ஈடு செய்வதற்காக அரசாங்கம் புதிய ................................ விதிக்கவுள்ளது

(1) வரிகளை (2) மானியம் (3) நிவாரணம் (4) ஊதியம்

➢ **கீழே தரப்பட்டுள்ள பாடலை அடிப்படையாகக் கொண்டு வினாக்களிற்கு விடை தருக.**

**சாதிமத பேதங்கள் மூட வழக்கங்கள்**
**தாங்கி நடைபெற்றுவரும் சண்டை யுலகிதனை**
**ஊதையினில் துரும்பு போல அலக்கழிப்போம், பின்னர்**
**ஒழித்திடுவோம், புதியதோர் உலகம் செய்வோம்**
**பேதமிலா அறிவுடைய அவ்வுலகத்திற்குப்**
**பேசு சுய மரியாதை உலகு எனப் பெயரிடுவோம்**
**ஈதே காண் ! சமூகமே யாம் சொன்ன வழியில்**
**ஏறு நீ ஏறு நீ ஏறு நீ ஏறே**

36) கவிஞர் சிருஷ்டிக்க விரும்பும் உலகிற்கு அவர் வைக்க விரும்பும் பெயர்

(1) பேதமிலா உலகு (2) புதிய உலகு

(3) அறிவு உலகு (4) சுயமரியாதை உலகு

37) தாம் வாழ்ந்த காலத்து உலகிலிருந்து ஒழிக்கப்பட வேண்டியவை எனக் கவிஞராற் கருதப்படாதவை

(1) சாதிமத பேதங்கள் (2) துரும்புகள்

(3) மூட வழக்கங்கள் (4) சண்டைகள்

38) இப்பாடலைக் கவிஞர் எத்தகைய உணர்வோடு பாடியுள்ளார்?

(1) இரக்கம் (2) ஆவேசம் (3) துன்பம் (4) பரிகாசம்

39) "சண்டை உலகிதனை ஊதையினில் துரும்பு போல அலக்கழிப்போம்" இதில் உவமானமாக வந்துள்ளது

(1) சண்டை உலகு (2) அலக்கழித்தல்

(3) ஊதையினில் துரும்பு (4) போல

40) கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்கு பெற வைத்தால் கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அதற்கேற்ற வைப்பு முறையைத் தெரிவு செய்க.

அ) இன்பம் வரும்போது மகிழ்கிறோம்.

ஆ) அந்த இரண்டும் எல்லோரது வாழ்க்கையிலும் வந்து போகின்றன.

இ) ஆனால் துன்பம் வரும் போது துவண்டு விடுகிறோம்.

ஈ) இன்பமும் துன்பமும் கலந்ததே உலகம்

உ) அவ்வாறன்றி இன்பத்தையும் துன்பத்தையும் சமமாக ஏற்றால் எமது வாழ்க்கை அமைதி நிறைந்ததாய் அமையும்.

(1) ஈ, ஆ, அ, இ, உ (2) உ, ஈ, இ, ஆ, அ

(3) இ, ஈ, அ, உ, ஆ (4) ஆ, உ, இ, அ, ஈ

($40 \times 1 = 40$ புள்ளிகள்)

## பகுதி - II

**01) சுருக்கமான விடை தருக.**

(1) பின்வரும் தொடரினை சந்திபிரித்து எழுதுக.
சிலிர்த்துடலின் நீரகற்றும் சிறுபறவை

(2) படி - இச்சொல் தன்வினையாகவும், பிறவினையாகவும் வர வாக்கியம் அமைக்குக.

(3) மலர்விழி - இது இருவேறு தொகையாக இடம்பெறுமாற்றை விளக்குக.

(4) அழகும் அறிவும் அடக்கமும் நிறைந்த அந்தப் பையன். இது எவ்வகைத் தொடர்?

(5) அந்த நடுநிசியில் மனிதர் ஒருவரும் நடமாடவில்லை
இவ்வாக்கியத்தில் இடம்பெறும் "உம்" இடைச்சொல்லிற்குப் பதிலாக இடம்பெறத்தக்க வேறு இடைச்சொல்லைப் பயன்படுத்தி வாக்கியத்தை மீண்டும் எழுதுக.

(6) அவள் கண்கள் பளபளக்கும் வைரத்தில் பதித்துவிட்ட மரகதங்கள் போல் மின்னின. இங்கு பயின்று வந்துள்ள அணி எது?

(7) இண்டு முழுக்க நான் தான் பாத்துக் கொள்ளுறன். இப் பேச்சுவழக்குத் தொடரை எழுத்து வழக்குத் தொடராக மாற்றுக.

(8) நான் வீட்டில் இருக்க மாட்டேன். என்னைத் தேடி யாரும் வரவேண்டாம் - இவ்வாக்கியத்தில் வந்த மாற்றுப் பெயர் யாது?

(9) தரப்பட்ட கூட்ட நிகழ்ச்சியை ஒழுங்குபடுத்துக.
பிரதமவிருந்தினர் உரை, தலைமையுரை, நன்றியுரை, தமிழ்வாழ்த்து, வரவேற்புரை

(10) "பணி" என்ற சொல் பெயராகவும் வினையாகவும் அமையுமாறு ஒவ்வொரு வாக்கியம் எழுதுக.

($10 \times 2 = 40$ புள்ளிகள்)

**02) பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து ஏறத்தாழ 250 சொற்களில் அமையுமாறு விடை எழுதுக. நீங்கள் தெரிவு செய்த விடயத்திற்குப் பொருத்தமான தலையங்கம் இடுக.**

(1) இன்று உலக நாடுகளை அச்சுறுத்தும் நோய்களில் ஒன்று கொவிட் - 19 கொரோனா நோய்த் தொற்று ஆகும். இந்நோய்த் தொற்று எமது நாட்டிலும் பாரியதொரு பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. நமது நாட்டில் நோயில் இருந்து பாதுகாப்புப் பெறுவதற்கான சரியான வழிமுறைகளை மக்கள் பின்பற்றாத காரணத்தால் நோய் பரவும் சாத்தியங்கள் அதிகரித்துள்ளன. ஆகவே நோய், நோய்த் தாக்கம், நோய்த் தடுப்பு நடவடிக்கைகள், தடுக்காது விட்டால் ஏற்படும் விளைவுகள் தொடர்பாக விளக்கக் கட்டுரை எழுதுக.

(2) ஒரு நாட்டின் அபிவிருத்தி என்பது அந்த நாட்டின் விவசாயம், தொழில்துறை என்பவற்றின் விருத்தியிலேயே பெரிதும் தங்கியுள்ளது. ஆகவே உள்நாட்டு உற்பத்திப் பொருட்களைக் கொள்வனவு செய்வதன் மூலம் அவற்றுக்கு ஆதரவு அளிப்பதிலேயே அந்நாடு பொருளாதார நிலையில் முன்னேற முடியும். இதனை விடுத்து இறக்குமதி பண்டங்கள் மீது மோகம் கொண்டு அவற்றை நுகர்வதால் நாடு பாரிய பொருளாதார வீழ்ச்சியை நோக்கிச் செல்லும் என்ற பொருள் அமைந்த ஒரு மேடைப்பேச்சு.

(3) உல்லாசப் பயணிகளின் வருகையால் நாட்டின் வருமானம் அதிகரித்து நாடு முன்னேற்றமடையும் எனக் கருதும் ஒருவருக்கும் நாட்டின் பண்பாடு சீரழிவதுடன் போதைப் பொருள் பாவனை, நோய்த்தொற்றுக்கள் ஆகியன ஏற்பட்டு நாடு பாதிப்படையும் எனக் கருதும் மற்றொருவருக்கும் இடையிலான ஓர் உரையாடல்.

(4) படிப்பில் அக்கறையின்றி அடிக்கடி ஆசிரியரின் கண்டிப்புக்கு ஆளான கண்ணன் விருப்பமின்றியே பாடசாலைக்கு வந்து சென்றான். இதன்போது அப்பாடசாலைக்குப் புதிதாக வந்து சேர்ந்த காந்தனின் நட்பு அவனது செய்கையில் மாற்றங்களை ஏற்படுத்தியது. நட்பின் வலிமையை விளக்கி ஒரு சிறுகதை எழுதுக.

(25 புள்ளிகள்)

**03) பின்வரும் உரைப்பகுதியை 40 – 45 சொற்களில் சுருக்கி எழுதுக.**

இனிமையான குழலிசை கேட்கின்றது. சிலர் அதைக் கேட்டும் கேளாதவர்கள் போல் வேறு பேச்சில் ஈடுபட்டிருக்கின்றனர். சிலர் அதைக் கேட்டு உருகி நிற்கின்றனர். வேறு சிலர் அந்தக் குழலிசை நின்ற பிறகும் சிறிது நேரம் வரையில் முன் போலவே மனம் ஒன்றுபட்ட நிலையில் அமைதியாக இருந்து பிறகு பெருமூச்சு விடுகின்றனர். இவ்வேறுபாட்டிற்குக் காரணம் என்ன? நாடகத்தில் மிக உருக்கமான துயரக் காட்சி ஒன்று வருகிறது. காண்பவர்களில் சிலர் கவலையின்றிப் பார்ப்பர். சிலர் வாடிய முகத்தோடு பார்ப்பர். சிலர் மனம் நெக்குருகி கண்ணீர் விட்டுக் கலங்குவர். இவ்வேறுபாட்டிற்குக் காரணம் என்ன? இசை, நாடகம் முதலிய கலைகளில் ஈடுபடுவதற்கு ஏற்ற உணர்ச்சியை இயற்கையாய் அவர்கள் பெற்றிருத்தலும் உண்டு. பயிற்சியால் வளர்த்திருத்தலும் உண்டு. இயற்கையாலும் பயிற்சியாலும் மக்கள் பலவாறு வேறுபடுகின்றார்கள். அதுவே மேற்குறித்த வேறுபாட்டிற்குக் காரணம். பாட்டை நுகர்வதிலும் கதையைப் படிக்கும் போது கதைமாந்தரின் இன்ப துன்பங்களைத் தாமும் அனுபவித்து கதை முடிந்த பின்பும் ஓரிரு நாட்கள் கதையில் உணர்ச்சி வசமாய் இருப்பார்கள். அவ்வாறு இல்லாமல் உணர்ச்சி இல்லாமல் கதையைப் படித்து மனம் அசையாமல் புத்தகத்தை மூடி மறப்பவர்களும் உண்டு. இவ்வாறு வேறுபடுவோர் உண்டு. வரலாறு படிப்பது போல் பாட்டைப் படித்து முடிப்பவர்களும் உண்டு. இந்த வேறுபாட்டிற்கெல்லாம் காரணம் மேற்கூறிய அவரவர்களின் மனத்தின் இயற்கை வேறுபாடும் பயிற்சி வேறுபாடுமே ஆகும்.

(10 புள்ளிகள்)

**04) பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் கீழே தரப்பட்டுள்ள வினாக்களிற்கு விடை தருக.**

தமிழில் கலை இலக்கியங்கள் வளர்ந்த அளவோடு ஒப்பிடுகையில் விமரிசனக்கலை போதியளவு வளர்ச்சியடையவில்லை என்ற குறை நிலவி வருவதை அவதானிக்கலாம். விமரிசனம் என்பது படைப்பாளிக்கும் வாசகருக்கும் இடையே தொடர்பை வலுப்படுத்துவதோடு மேலதிக விளக்கங்களை

ஏற்படுத்துவதாயும் விமரிசனம் திகழ வேண்டும் இந்த முயற்சி போதியளவு வெற்றி பெறாத காரணத்தாலும், படைப்பாளர்கள் விமர்சனத்தைக் கண்டு சீற்றம் கொள்ளும் பக்குவமின்மையாலும் விமரிசனக்கலை வளர்ச்சி பெற இயலாதுள்ளது. ஆக்கங்கள் அனுபவச் செழுமைகளை உணர்வெழுச்சியுடன் வெளிப்படுத்துவன வாழ்விலிருந்து பிறந்து ஏனையவர்களது வாழ்வைச் செப்பனிட ஒத்ததாக படைப்பாக்கம் மிளிர்கிறது. நல்ல படைப்புக்கள் மனித உணர்வுக் காட்டின் தீமைகளை எரிக்கும்.

(1) விமரிசனம் எவ்வாறு அமைய வேண்டும்?
(2) விமரிசனக் கலை வளர்ச்சி பெற முடியாமல் போனதற்குக் கட்டுரையாசிரியர் கூறும் காரணம் யாது?
(3) படைப்பாக்கம் எவ்வாறு அமைய வேண்டும்?
(4) நல்ல படைப்பாக்கத்தின் பண்பு யாது?
(5) இப்பந்தியின் பிரதான கருத்தாக ஆசிரியர் கூறுவது யாது?

($5 \times 2 = 10$ புள்ளிகள்)

05) குடியிருப்புக்கள் நெருக்கமான நகரங்களிலும், கிராமங்களிலும் கழிவகற்றல் என்பது மிக முக்கியமான பிரச்சினையாக சூழலை மாசுபடுத்துவதாக உள்ளது. கழிவகற்றல் நடவடிக்கையில் பொதுமக்களும் உரிய அதிகாரிகளும் ஒழுங்குமுறையைக் கடைப்பிடிப்பதன் மூலம் பிரச்சினையைத் தவிர்ப்பதோடு கழிவுகளைப் பயனுடையனவாக்கவும் முடியும். இவற்றை வலியுறுத்தி உமது பிரதேசத்தில் கழிவகற்றும் நடவடிக்கைக்குப் பொறுப்பாக உள்ள மாநகரசபை ஆணையாளருக்கு 100 சொற்களில் கடிதம் எழுதுக.

**அல்லது**

அதிகரித்துவரும் பொலித்தீன் பாவனை பற்றியும் அதனால் சுற்றுப்புறச் சூழல் மாசடைவது பற்றியும் விளக்கி பொலித்தீன் பாவனையைக் கட்டுப்படுத்துமாறு வலியுறுத்தி 100 சொற்களில் அமையுமாறு ஒரு துண்டுப்பிரசுரம் தயாரிக்குக.

(15 புள்ளிகள்)

## பகுதி - III

- அறிவுறுத்தல்களுக்கேற்ப ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
- 1, 2, 3, 4 ஆகிய வினாக்களுக்கும் 5, 6, 7 ஆகிய வினாக்களில் ஏதாவது ஒரு வினாவிற்கும் விடை எழுதுக.

**01) சுருக்கமான விடை தருக.**

(1) யானை அனையவர் நண்பொரீஇ நாயனையார்
கேண்மை தழீஇக் கொளல் வேண்டும்

அ) இப்பாடல் இடம்பெறும் நூல் யாது?

ஆ) யானையின் நட்பைவிட நாயின் நட்பு சிறந்ததெனக் கூறப்படுவது ஏன்?

(2) தாழு முள்ளத்தர், சோர்வினர், ஆடுபோல்
தாவித் தாவிப் பலபொருள் நாடுவோர்

அ) இங்கு ஆட்டின் செய்கை யாருக்கு உவமிக்கப்பட்டுள்ளது?

ஆ) முயற்சியற்றவர் இயல்புகள் இரண்டினைத் தருக.

(3) மேழி பெருகவேணும் தம்பிரானே
நாடு தழைக்க வேணும் தம்பிரானே

அ) மேழி என்பதன் கருத்து யாது?

ஆ) தம்பிரான் எனக் குறிப்பிடப்படுபவர் யார்?

(4) "..........அவ் இரக்கம் இலாளையும்
தன் நல் கையின் வணங்கினன் தாய் என"

அ) கைகேயியை இரக்கம் இலாள் எனக் கூறக் காரணம் யாது?

ஆ) இங்கு வணங்கினன் எனப்பட்டது யாரை?

(5) "நல்ல சினிமாவுக்குச் சில அடிப்படை அளவுகோல்கள் உண்டு"

அ) இக் கட்டுரையின் ஆசிரியர் யார்?

ஆ) சினிமா மொழியில் உள்ளஅம்சங்கள் மூன்றும் எவை?

(6) "இன்பப் பயன் காணச் செய்கின்ற இலட்சியம் சமூகமாகிய உடலுக்கு உயிராக அமைந்துள்ளது"

அ) இங்கு இடம்பெற்றுள்ள அணி யாது?

ஆ) இங்கு உடலாகவும் உயிராகவும் கருதப்படுபவை யாவை?

(7) "நண்பர் கம்பியூட்டருக்குத் தலபுராணம் எழுதியவர் விடுவாரா? இப்போது வட்டியும் முதலுமாக அவர்களைப் போட்டுக் குடை குடையென்று குடைந்தார்.

அ) தலபுராணம் என்றால் என்ன?

ஆ) தலபுராணம் என்ற தொடர் இங்கே என்ன பொருளில் கையாளப்பட்டது?

(8) "ஏலம்பூவாய் பொசுங்க
எரியுறது தீக்கொழுந்து
காலப்புனல் கனக்கும்
கண்ணீரையும் சுமந்து"

அ) ஏலம்பூவாய் என்பதால் நீர் விளங்கிக் கொள்வது யாது?

ஆ) 'காலப்புனல்' என்பதில் இடம்பெற்ற அணி யாது?

(9) "கூட்டிற் பசுங்கிளி போற் கோதையரை யெப் பொழுதும்
வீட்டி லடைத்து வைக்கும் விரகிலருக் கியா துரைப்போம்"

அ) விரகிலர் என்போர் யார்?

ஆ) மேற்படி அடிகள் மூலம் கவிஞர் உணர்த்த விரும்புவது யாது?

(10) "சிந்தூரத் திலக நுதல் சிந்துரத்தின்
மருப்பு ஒசித்த செங்கண் மாலே"

அ) சிந்தூரம், சிந்துரம் என்பதன் பொருள் யாது?

ஆ) திருமாலின் செயலாகக் குறிப்பிடப்படுவது யாது?

($10 \times 2 = 20$ புள்ளிகள்)

**02) பின்வரும் செய்யுட் பகுதிகளையும் உரைநடைகளையும் வாசித்து அவற்றின் கீழே தரப்பட்டுள்ள வினாக்களிற்கு விடை தருக.**

(1) கற்றார்முன் கல்வி உரைத்தல் மிக இனிதே
மிக்காரைச் சேர்தல் மிகமாண முன் இனிதே
எட்டுணை யானும் இரவாது தான் ஈதல்
எத்துணையும் ஆற்றல் இனிது

அ) இப்பாடலில் உணர்தத்ப்படும் இனிய செயல்கள் எவை?

ஆ) மிக்கார், எட்டுணை என்பவற்றின் கருத்தை எழுதுக.

(2) வயிரம் எனும் சுடுநெருப்பை மிக மூட்டி
    வளர்க்கின் உயர்வரைக் காடு என்ன
செயிர் அமரில் வெகுளி பொர சேர இரு
    திறத்தேமும் சென்று மாள்வோம்
கயிரவமும் தாமரையும் கமழ் பழனக்
    குருநாட்டில் கலந்து வாழ
உயிர் அனையாய் சந்துபட உரைத்தருள் என்றான்
    அறத்தின் உருவம் போல்வான்

அ) இப்பாடலில் குருநாட்டின் வளச் சிறப்பு எவ்வாறு எடுத்துக் காட்டப்படுகிறது?

ஆ) போரை விரும்பாத தர்மனின் மனநிலை எவ்வாறு எடுத்துக் காட்டப்படுகிறது?

(3) மட்டுருக்கால அருவாளு மடித்து
மாவிலங்கன் பிடி சீவியிறுக்கி
வெட்டும் பிடியைச் சிறக்கவே போட்டு
வெள்ளித் தகட்டினால் விரல் கட்டமிட்டு
வளர்ந்தரிவி வெட்டும் இளந்தாரிமாரை
நாவூறு வராமற் காரும் ஐயனாரே

அ) அருவி வெட்டும் கருவி எவ்வாறு செய்யப்படுகிறது?

ஆ) ஐயனாரிடம் யாரை, எவ்வாறு காக்குமாறு வேண்டுகின்றனர்?

(4) காட்சிப் படிமங்களை இணைப்பதற்குப் பலமுறைகள் உண்டு. ஒவ்வொன்றிற்கும் தனியான ஒரு அர்த்தமுண்டு. கண்ணிமைப்பது போல் காட்சி மாறுவது கட் இது ஒரு இணைப்புத்தான். ஒரு காட்சி மங்கி அதே தருணத்தில் அடுத்த காட்சி திரையில் தோன்றுவது மயங்கித் தெளிதல். திரை இருண்டு பின் மறுகாட்சி வருவது இருண்டு தெளிதல் சினிமா மொழியில் கால்புள்ளி, முற்றுப்புள்ளி, பந்தி என இவற்றைச் சொல்லலாம். சத்திய ஜித்ரே, பதேர் பாஞ்சாலியில் பருவங்கள் மாறுவதை வரிசையாக சில மயங்கித் தெளிதல்கள் மூலம் உணர்த்துகிறார். வேறு கால கட்டத்தில் வேறு இடத்தில் நிகழ்பவை என்பதை மயங்கித் தெளிதல் மூலமாகவும் இருண்டு தெளிதல் மூலமாகவும் கூறலாம்.

அ) காட்சிப் படிமங்களை இணைக்கும் முறைகள் எவை?

ஆ) சினிமா மொழியில் முற்றுப்புள்ளி என்று எதனைச் சொல்லலாம்? அது எவ்வாறு அமையும்?

(5) பிற உயிர்களை தம் உயிரில் கண்ட சமயநெறிச் செல்வராகிய தருமபுத்திரர் தமக்கும் நாய்க்கும் இடையே ஒருமை காண்கிறார். அதன் துன்பத்தைத் தமக்கு வந்ததாகப் பாவிக்கிறார். நாயைத் தோளிலே தூக்கி வைத்துக் கொண்டு முத்தி உலக வாயிலை அடைகிறார். நாயை வெளியே விட்டு உள்ளே புகுமாறு முத்தி உலகம் உத்தரவிடுகிறது. இந்த நாய்க்கு உரிமை இல்லாத முத்தி உலகம் எனக்கு வேண்டாமென மறுத்துக் கூறுகிறார். அறத்தின் பயனாகிய முத்தியையும் உடன் கொண்டு முத்தி உலகம் புகுகின்றார். இது நாம் முன்னோர் கண்டு அனுபவித்த உலகுக்கு உபகரித்த சமநிலைக் கொள்கைக்கு ஓர் உரைகல்லாக விளங்குகிறது.

அ) இப்பகுதியில் 'முத்தி உலகம்' என எதைக் கருதுகிறார்?

ஆ) இப்பகுதியில் சமநிலைக் கொள்கை என ஆசிரியர் எதனைக் கருதுகிறார்?

($5 \times 4 = 20$ புள்ளிகள்)

03) குகப்படலத்தில்

அ) குகனின் சிறப்புக்கள்

ஆ) கைகேயியின் கொடுமைக் குணம்

என்பன புலப்படுமாற்றை விளக்குக.

**அல்லது**

கிருட்டிணன் தூதுச் சருக்கத்தில்

அ) தருமனின் சமாதான எண்ணம்

ஆ) போருக்குத் தூண்டும் கிருட்டிணனின் முனைப்பு

என்பன விபரிக்கப்படுமாற்றை விளக்குக.

(15 புள்ளிகள்)

04) நாவலர் எழுந்தார் என்ற கட்டுரையில்

அ) விவாதம் செய்ய எழுந்த நாவலரின் தோற்றப் பொலிவு

ஆ) நாவலரின் நேர்மையும் பிறிற்றோவின் நேர்மையீனமும்

புலப்படுமாற்றை தெளிவுபடுத்துக.

**அல்லது**

மூத்தம்மா என்ற சிறுகதையில்

அ) கிராமத்தில் காணப்படும் வாழ்வியல் அம்சங்கள்

ஆ) மூத்தம்மாவைப் பார்த்து காசிம் தன் ஆளுமைகளை வளர்த்துக் கொண்ட விதம்

என்பன சித்திரிக்கப்பட்டிருக்குமாற்றை விளக்குக.

(15 புள்ளிகள்)

05) குழந்தையென எனது மனம் குதூகலிக்கும்....... என்ற கவிதையை அடிப்படையாகக் கொண்டு

அ) மருதநிலச் சிறப்பு

ஆ) உழவர் சிறப்பு

என்பன எடுத்துக்காட்டப்படுமாற்றை விளக்குக.

(10 புள்ளிகள்)

06) தனிப்பாடல்கள் என்ற பகுதியில்

அ) சீதக்காதி வள்ளலின் கொடைச் சிறப்பு

ஆ) காளமேகப் புலவர் கவிபாடப் புறப்பட்ட விதம்

ஆகியவற்றை விளக்குக.

(10 புள்ளிகள்)

07) இலட்சியமும் சமநோக்கும் என்ற கட்டுரையை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.

அ) கண்ணகியின் இலட்சியம்

ஆ) தசரதனின் இலட்சியம்

(10 புள்ளிகள்)